අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education**

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2784825

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ–மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No.: ..........................

මගේ අංකය / எமது இல. / My No.: ஈடி/04/60/02/ஆ.கோ.

දිනය / திகதி / Date: 2011.06.23

**சுற்றறிக்கை இல.: 2011/24**

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாண / வலயக் கல்விப் பணிப்பாளர்கள்.

**<u>2000.08.04 மற்றும் 2002.01.01 ஆந் திகதிகளில் இலங்கை அதிபர் சேவைக்கு நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களின் சம்பளங்களைத் தயாரித்தல்</u>**

கல்வி அமைச்சின் சுற்றறிக்கை இல. 2010/12 இற்கமைவாக 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை அதிபர் சேவையில் நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களை, அவர்களின் விருப்பத்துக்கு அமைய ஆசிரியர் சேவைக்குச் செல்வதற்கான கோரிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு சகல மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இவ்வமைச்சுக்கு 500 இற்கும் மேற்பட்ட அளவினர் கோரிக்கைகளை விடுத்ததுடன், இது தொடர்பில் இணக்கத்தைப் பெற்றுக்கொள்ள தாபனப் பணிப்பாளர் மற்றும் தேசிய சம்பள ஆணைக்குச் செயலாளருக்கும் கடிதம் அனுப்பப்பட்டது.

02. இதற்கமைய 2000.08.04 மற்றும் 2002.01.01 ஆகிய திகதிகளில் அதிபர் சேவைக்கு நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட ரீதியில் (நிலுவைச் சம்பளம் செலுத்தாது) கீழ்க்குறிப்பிடப்பட்ட முறைகளைப் பின்பற்றி அவர்களது சம்பளத்தை மாற்றியமைக்க தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் இல. EST-4/MINUT/04/2704 மற்றும் 2011.04.20 ஆந் திகதி கொண்ட கடிதம் மூலமும், தேசிய சம்பள ஆணைக்குச் செயலாளரின் இல. NS/CC/1/34/S-1 மற்றும் 2011.04.25 ஆந் திகதி கொண்ட கடிதம் மூலம் இணைக்கம் வழங்கப்பட்டது. இது மேற்கூறப்பட்ட தினங்களில் அதிபர் நியமனம் பெற்று தற்போது ஓய்வுபெற்றுள்ள உத்தியோகத்தர்களுக்கும் செல்லுபடியாகும் எனத் தயவாய் அறியத்தருகிறேன்.

**இலங்கை ஆசிரியர் சேவையிலிருந்து இலங்கை அதிபர் சேவைக்கு நியமனம் பெறும் தினமன்று,**

1. ஆசிரியர் சேவையில் பெற்றுவந்த சம்பளம் புதிய சம்பள அளவின் ஆரம்ப சம்பளத்தை விடக் குறைவாகவிருப்பின் அவர் புதிய சம்பள அளவின் ஆரம்ப சம்பளத்தில் நிலைப்படுத்தப்படுவார்.
2. இச்சேவையில் பெற்று வந்த சம்பளம் புதிய சம்பள அளவின் சம்பள கட்டத்து அமைவாக இருப்பின் அவர் அச்சம்பளக் கட்டத்திலேயே நிலைப்படுத்தப்படுவார்.
3. ஆசிரியர் சேவையில் பெற்றுவந்த சம்பளம் புதிய சம்பளத்தின் சம்பள அளவுகளுக்கிடையே இருப்பின் புதிய சம்பள அளவின் உயரிய மட்டத்தில் நிலைப்படுத்தப்படுவார்.
4. சம்பள உயர்வின் பெறுமதியாக அமைவது அதிபர் சேவையில் நியமனம் பெற்ற தரத்துக்குரிய சம்பள உயர்வின் பெறுமதியாகும்.

03. இச்சுற்றறிக்கை 2011 ஜுலை 01 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வருகின்றது.

எச்.எம். குணசேகர,
செயலாளர்,
கல்வி அமைச்சு.